

உதகையில் தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளை முன்னிட்டு தலைமைச் செயற்குழு உறுப்பினர் கே.தம்பி இஸ்மாயில் ஏற்பாட்டில் ஏழை எளிய மக்கள் பயன்பெறும் வகையில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி மாவட்ட தி.மு.க. பொறுப்பாளர் கே.எம்.ராஜு தலைமையில், கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் பா.மு.முபாரக் முன்னிலையில் நடைபெற்றது, செயற்குழு உறுப்பினர் கே.தம்பி இஸ்மாயில் வரவேற்றார். நலத்திட்ட உதவிகளை கழக துணை பொதுச்செயலாளரும் நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினருமான ஆ.இராசா வழங்கி சிறப்புரையாற்றினார். மாவட்ட அவை தலைவர் போஜன், மாவட்ட துணைச் செயலாளர் ரவிக்குமார், மாவட்டப் பொருளாளர் நாசர் அலி, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் இளங்கோவன், Expo செந்தில், மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளர் பரமேஷ்குமார், மாநில விளையாட்டு மேம்பாட்டு அணி துணைச் செயலாளர் வாசிம் ராஜா, உதகை மேற்கு நகர பொறுப்பாளர் ரமேஷ், உதகை வடக்கு மேற்கு ஒன்றியச் செயலாளர் தொரை, பொதுக்குழு உறுப்பினர் வாணீஸ்வரி, மாவட்ட திட்டக்குழு உறுப்பினர்கள் ராஜேந்திரன், விசாலாட்சி தலைமைக் கழகப் பேச்சாளர் பாண்டியராஜ் ஆகியோர் உட்பட கழக நிர்வாகிகள், நகரமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். உதகை கிழக்கு நகரச் செயலாளர் ஜார்ஜ் நன்றி கூறினார்.

### மு.சண்முகம் – பா.மணிமாறன் பங்கேற்பு!

# முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆட்சி தொடர களப்பணி ஆற்றுவோம்!

## தமிழ்நாடு மின்கழக தொ.மு.ச. பொதுக்குழுவில் தீர்மானம்!

சென்னை, ஜன. 15 –

தமிழ்நாடு மின்கழகத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கத்தின் 22வது மாநில பொதுக்குழுவில் 2026ல் நடைபெற உள்ள தமிழ்நாடு சட்டமன்ற தேர்தலில் 200 தொகுதிகளுக்கு மேல் வெற்றி பெற்று முதல்வர் மு.க. ஸ்டாலின் தலைமையிலான பொற்கால ஆட்சி தொடர மின்கழகத் தொ.மு.ச.வினர் கடுமையாக களப்பணி யாற்றிட வேண்டும் என தீர்மானம் ஏகமனதாக நிறைவே ற்றப்பட்டது.



தமிழ்நாடு மின்கழகத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கத்தின் 22வது மாநில பொதுக்குழு கூட்டம் 10.1.2026ல் அன்று சென்னை வேப்பேரி, பெரியார் திடலில் நடைபெற்றது. கூட்டத்திற்கு சங்க மாநிலத்தலைவர் கே.சசி குமார் தலைமை தாங்கினார். மாநில பொதுச்செயலாளர் பா.மணிமாறன் முன்னிலை, மாநில சிறப்புத்தலைவர் நெல்லை எஸ்.நடராசன் வரவேற்புரையுடன் நடைபெற்றது.

அகில இந்திய தொழிலாளர் முன்னேற்றச் சங்கத்தின் பேரவை பொதுச்செயலாளர் மு.சண்முகம், அவர்கள், பேரவைத் தலைவர் கி.நடராசன் அவர்கள், பேரவை பொருளாளர் கோ.சி.வள்ளுவன் மற்றும் பேரவை நிர்வாகிகள், பொதுக்குழுவில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்கள்.

இப்பொதுக்குழு கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டன.

2026–ல் நடைபெறவுள்ள தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் 200 தொகுதிகளுக்கு மேல் வெற்றி பெற்று திமுகழகம் 7வது முறையாக ஆட்சியில் அரியணையில் அமர / கழகத் தலைவர் அன்புத் தளபதி அவர்களின் பொற்கால ஆட்சி தொடரவும், தொழிலாளர்களின் நலன் பாதுகாக்கும் திராவிட மாடல் அரசின் முதலமைச்சர் அன்புத்தளபதி அவர்களை தமிழ்நாடு முதலமைச்சராக மக்கள் பணியாற்றிட 2வது முறையாகவும் தேர்ந்தெடுக்க மின்கழகத் தொ.மு.ச.வினர் கடுமையாக களப்பணியாற்றிட வேண்டும்.

இப்பொதுக்குழு தீர்மானம் நிறைவேற்றப்பட்ட அரசு ஊழியர்களின் 23 ஆண்டுக்கால கோரிக்கையை நிறைவேற்றி தமிழ்நாடு உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியம் TAPS – (Tamil Nadu Assured Pension Scheme) வழங்க உத்தரவு பிறப்பித்து அரசு ஊழியர்களிடம் மனமகிழ்ச்சியை ஏற்படுத்திய தொழிலாளர்களின் பாதுகாவலர் முதலமைச்சர் அவர்கள் நன்றி தெரிவித்து இப்பொதுக்குழு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இளைஞர்களின் எதிர்காலம், தமிழகத்தின் நம்பிக்கை நட்சத்திரம், விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகளின் விடியல் நாயகர், தமிழ்நாடு பல துறைகளில் முன்னேற்றம் பெற முதலமைச்சர் அவர்களுக்கு துணையாக இருந்து அயராது பாடுபடும் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை பாராட்டி பொதுக்குழுவில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கொரோனா பெருந்தொற்று முதலாம் மற்றும் இரண்டாம் அலையிலும், பேரிடர் காலங்களிலும், புயல், கடும் மழையிலும் தமிழ்நாடு மக்களுக்கு தடையில்லா மின்சாரம் வழங்கிக்கொண்டிருக்கும் மின்வாரிய தொழிலாளர்கள், பொறியாளர்கள் மற்றும் அலுவலர்களுக்கு 01.12.2023 முதல் வழங்க வேண்டிய ஊதிய உயர்வை வழங்க பொதுக்குழுவில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. 2019 முதல் 2024ம் ஆண்டிற்கான தணிக்கை செய்யப்பட்ட வரவு, செலவு கணக்குகளுக்கு ஒப்புதல் பெறப்பட்டது.

ஒன்றிய அரசு கொண்டு வந்த மின்சார சட்ட திருத்த மசோதா, தொழிலாளர் நான்கு சட்ட தொகுப்புகளை ரத்து செய்யக் கோரி தீர்மானம்.

தமிழ்நாடு மின்கழகத் தொழிலாளர் முன்னேற்றச் சங்க, மத்திய சங்கத்தின் நிர்வாகிகள் தேர்தலை சங்கத்தின் சட்டவிதிகளின்படி தொ.மு.ச. பேரவை முன்னின்று நடத்திட இப்பொதுக்குழு ஒருமனதாக தீர்மானம்.

தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவை பொதுச்செயலாளர் அவர்களால் நியமனம் செய்யப்பட்டுள்ள பேரவை இணைப்பொதுச்செயலாளர் திரு.ஜெ.விஜயகுமார் அவர்களை தேர்தல் ஆணையாளராகவும் பேரவையால் வெளியிடப்பட்டுள்ள 10.1.2026 முதல் 25.1.2026 வரையிலான தேர்தல் அட்டவணையின் படி, வாக்குப்பதிவை 25.1.2026 அன்று திருச்சி, பெல் தொழிலாளர் முன்னேற்றச் சங்க அலுவலகத்தில் நடத்திட முடிவு செய்துள்ளதையும் இப்பொதுக்குழு ஒருமனதாக ஏற்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மேற்கண்ட தீர்மானங்கள் உட்பட 30 தீர்மானங்கள் இப்பொதுக்குழுவில் ஒருமனதாக நிறை வேற்றப்பட்டன.

சங்கத்தின் பொருளாளர் தே.மெய் ஞானமூர்த்தியால் வாசிக்கப்பட்ட 2019, 2020, 2021, 2022, 2023 மற்றும் 2024 ஆகிய ஆண்டுகளுக்கான தணிக்கை செய்யப்பட்ட வரவு செலவு கணக்குகளை இப்பொதுக்குழு சமர்ப்பித்து ஒப்புதல் பெற்றார்.

முன்னதாக சங்கத்தின் பொதுச் செயலாளர் பா.மணிமாறன் வாசித்த ஆண்டறிக்கையினை இப்பொதுக் குழு ஒரு மனதாக ஏற்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

சங்கத்தின் மாநில துணை தலைவர்கள், துணை பொதுச்செயலாளர்கள், வட்டாரச் செயலாளர்கள், திட்டத் தலைவர்கள், திட்டச் செயலாளர்கள் மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள் என 557 பேர்களும் மற்றும் பார்வையாளர்கள் 500க்கு மேற்பட்டவர்களும் கலந்துகொண்டனர்.

இப்பொதுக்குழுவில் நிறைவாக மாநில முதன்மைச் செயலாளர் தே.முரளிகுமார் நன்றி கூறினார்.

### தி.மு.க. இலக்கிய அணி

## திருவண்ணாமலை வடக்கு மாவட்ட துணை அமைப்பாளர் நியமனம்!

### தி.மு.க. இலக்கிய அணிச் செயலாளர் வி.பி.கலைராஜன் அறிவிப்பு!

திருவண்ணாமலை வடக்கு மாவட்ட இலக்கிய அணி துணை அமைப்பாளராக **எஸ். பாபு** (கொருக்காத்தூர் கிராமம், ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம்.) அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 10-01-2026.

**வி.பி.கலைராஜன் ,**
செயலாளர்
தி.மு.க. இலக்கிய அணி

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ம. சங்கரலிங்கம்

### சனவரி 15 (2016)



**தந்தை பெரியார் – பேரறிஞர் அண்ணா – தலைவர் கலைஞர் ஆகியோரின் பகுத்தறிவுக் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு, அவர்கள் அடியொற்றி ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக கழகப் பணியாற்றியவர்.**

**1964 முதல் 1984 வரையிலான இருபது ஆண்டுகள் தொடர்ந்து தமிழக சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும் – நான்கு ஆண்டுகள் மேலவை எதிர்க்கட்சித் தலைவராகவும் பணியாற்றியவர்.**


**1998 முதல் 2004 வரை இந்திய பாராளுமன்ற மாநிலங்களவை உறுப்பினராக இருந்தவர்.**

**அண்ணா அவர்கள்மீது கொண்ட பற்றின் காரணமாக 'அறிஞர் அண்ணா கல்லூரி' ஒன்றினை நிறுவி, அதன் முதல்வராக இருந்தவர்.**

**கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

# திசைகளெங்கும் மகிழ்ச்சிப் பொங்கும் திராவிடப் பொங்கல்!



**உ**லகின் மூத்த குடியான தமிழினத்தின் பெருமை சொல்லி, "நன்றியுணர்வு மிக்கவர்கள் தமிழர்கள்! " என்பதை தங்களது உழவுத் தொழிலுக்கு ஆதாரமான உதயசூரியனுக்கும், கால்நடைகளுக்கும் கதிர் அறுத்து, புதுப் பானையில் பொங்கல் வைத்து, நன்றி சொல்லும் விழா, பொங்கல் விழா!

அதோடு தமிழரின் புத்தாண்டு விழா!

"உழுதுண்டு வாழ்வோரின் பின்னே இவ்வுலகம் தொழுதுண்டு செல்லும்! " என உழவர் பெருமக்களின் மேன்மையை தனது இனிய இரண்டடித் தமிழால் போற்றி வணங்கினார் நமது வள்ளுவப் பெருந்தகை.

ஆனால் அதே நேரத்தில், " உழுதவன் கணக்குப் பார்த்தால், அழுததுதான் மிச்சம்! " எனும் சொல்லாடலும் வழக்கில் உண்டு.

பாரின் பசிப்பிணி போக்க பாடுபட்டு உழைத்து, பாழும் நிலையில் உழலும் உழவன் வாழ்வில் விடியல் எப்போது? எனப் பன்னெடுங்காலம் உழவர்பெருமக்களெல்லாம் ஏங்கித்தவித்த நிலையில், தமிழ்நாட்டில் கழக ஆட்சி பொறுப்பேற்கும் நாளிலெல்லாம், பகலவனைக் கண்ட பனித்துளிபோல் மெல்ல, மெல்ல தமிழ்ப்பெருமக்களின் துயரம் நீங்கத் துவங்கியது.

அறிஞர் அண்ணா அவர்களைத் தொடர்ந்து, அவர் அடியொற்றி ஆட்சித் தலைமைக்கு வந்த நமது உயிரனையத் தலைவர் கலைஞர் அவர்கள் ஏழையெளிய குடியில் பிறந்து, இல்லாதோரின் இன்னல்கள் உணர்ந்தவர் என்பதால் அவர் தீட்டிய எண்ணற்ற திட்டங்கள் சாதாரண சாமானிய மக்களின் அடிப்படைத் தேவைகளுக்கானவைகளாகவே இருந்தது

பராசக்தியில் பஞ்சைப் பராரிகளின் பசிக்கொடுமையை எழுபத்தி நான்கு ( 1952 ) ஆண்டுகளுக்கு முன்பே வனத்தில் வடித்த தலைவர் கலைஞர் அவர்கள், " இட்லிக் கடை வியாபாரம் தான் தாலி அறுத்தப் பெண்களுக்கு தாசில் உத்தியோகம் எனக் கைம் பெண்கள் சொந்தக் காலில் நிற்க வசனம் தீட்டினார்.

அதே பராசக்தியில் ரங்கூனிலிருந்து அகதிகளாக வந்து, அனாதைகளாய், பிச்சைக்காரர்களாய் ஆக்கப்பட்டோரின் அவல நிலையை எடுத்துக் காட்டிய தலைவர் கலைஞர் அவர்கள் தான், தமிழ்நாடு முதலமைச்சராக இரண்டாம் முறையாகப் பொறுப்பேற்றிருந்த 70 களில் பிச்சைக்காரர் மறுவாழ்வு திட்டம் தீட்டி, அவர்களை நிம்மதிப் பெருமூச்சு விடச் செய்து பசிப்பிணி என்பது எவ்வளவு கொடுமையானது என்பதை உணரச் செய்தார்.

அந்தப் பசிக்கொடுமை போக்கிடும் விவசாயப் பெருமக்களுக்கு பேருதவியாக 1989 ல் மூன்றாவது முறையாக ஆட்சிக்கு வந்து, இலவச மின்சாரம் தந்தார்.

2006 ல் ஐந்தாம் முறையாக ஆட்சியிலமர்ந்து இந்தியாவே வியக்கும் வண்ணம் ஏழாயிரம் கோடி ரூபாய் ஏழை, நடுத்தர விவசாயிகளின் கடனை தனது முதல் கையெழுத்தில் ரத்து செய்து, அவர்கள் கண்ணீரைத் துடைத்து, பெரும் புரட்சி செய்தார்.

தலைவர் கலைஞர் அவர்களையடுத்து, அவரது தடம் பற்றி, ஆட்சித்தேரினை இயக்கும் நமது திராவிடப் பெருவேந்தர் தளபதியவர்கள், தான் கண்ட அரசியல், தேர்தல் களங்களிலெல்லாம் வெற்றிகளைக் குவித்து, வீரப் பண் இசைத்து, விடியல் ஆட்சியின் விளக் கொளி யாய் நாளும் உழைத்து, நமது இனம் தழைக்க அனைத்துத் தரப்பு மக்களின் அடிப்படை தேவையறிந்து, அவற்றை நிவர்த்தி செய்து, எல்லோரின் மனம் மகிழும் வண்ணம் பம்பரமாய்ச் சுழன்று பாடுபட்டு வருகிறார்.



**வழக்கறிஞர்**
**வெ.அன்புவாணன்**
கொள்கை பரப்பு துணைச் செயலாளர்.

எத்தனை, எத்தனை திட்டங்கள் எளிய மக்களின் எதிர்காலம் ஏற்றம் காணத் தீட்டி, தினம், தினம் தான் மட்டுமின்றி, தனது அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், நகராட்சிப் பிரதிநிதிகளைக் களமிறக்கி, மக்களின் தேவைகளை பூர்த்தி செய்ய நேர்த்தியாக உழைத்திட உத்தரவுகளைப் பிறப்பிக்கிறார்.

எல்லாவற்றிற்கும் மேலாக தனது அரசியல் வளர்ப்பு, வார்ப்பு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களையும், கணப்பொழுதும் ஓய்வின்றி, கண்ணுறக்கம் தள்ளி வைத்து, பெரும் மழையா? கடும்புயலா? கொடும் மண்சரிவா? மக்கள் அல்லல்படும் நிலையா? நேரில் சென்று நிவாரணம் செய்திட வழிவகைகள் செய்கிறார்.

தேர்தல் அறிக்கையில் சொன்ன வாக்குறுதிகளில் தொண்ணுரு சதவீதம் நிறைவேற்றிய நமது திராவிடமாடல் முதல்வர் அதிலே சொல்லப்படாத மக்கள் துயர்துடைக்கும், எத்தனையோ நலதிட்டப்பணிகளை ஆட்சியிலமர்ந்து அறிவித்து, செயல்படுத்தி வருகிறார்.

அவர் வகுத்திடும் திட்டங்கள் பெரும்பாலும், ஏழை மக்களின் ஏக்கக்கனவாய், எட்டாக்கனியாய் திகழ்ந்த உயர்கல்வி, செட்டிநாட்டு அரசர்கள், குட்டிக் குபேரர்கள், ஆலைமுதலாளிகள், ஆவாள் வீட்டு சேஷகோபாலன்கள் மட்டுமே பயிலவியலும் என்றிருந்த உயர்கல்வியை, ஏழை, நடுத்தர வீட்டுப் பிள்ளைகளும் பெற்றிடபல சலுகைகள், ஒதுக்கீடுகள் தந்த அவரது தந்தை தலைவர் கலைஞர் அவர்களின் சிந்தனைகளுக்கு, புகழ் மகுடமாக, புதுப்புது திட்டங்கள் அறிவித்து, புதுமைப்பெண் திட்டம், தமிழ்ப்புதல்வன் திட்டம், மடிக்கணினி, மிதிவண்டி, வழங்கியும் மாணவர்கள் வாழ்வில் ஏற்றம் வந்திட தனது சிந்தனையில் செதுக்கிய சீரிய திட்டங்களை தீட்டி, நிறைவேற்றி வருகிறார்.

எத்தனை மாணவச் செல்வங்கள் இந்திய ஆட்சிப் பணிகளில் முதலமைச்சர் திராவிடப் பேரரசர் தளபதியவர்களின் திட்டத்தால் பயனடைந்தோம் என நன்றியுணர்வுடன் அண்மையில் சாட்சி சொன்னார்கள்.

படிக்கப்போகும் பள்ளிக்கு பஸ் வசதி கோரிப் பெற்ற கிராமப்புற மாணவர்கள்.

பள்ளிக்கட்டிடம் புதிதாகக் கேட்டு பயனடைந்த கிராமத்து எளிய மக்கள். என ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம் என்ற பேரறிஞர் அண்ணா அவர்களின் கனவை நிறைவேற்றும் ஓர் மகத்தான ஆட்சியை தமது திராவிட மாடல் முதலமைச்சர் நடத்திவருகிறார்.

அண்மையில் திரையிடப்பட்ட பராசக்தி திரைப்படத்தில் ஒரு காட்சியில் பேரறிஞர் அண்ணா அவர்கள் 1967 ல் வெற்றி பெற்று, தான் இயற்றிய முக்கிய மூன்று திட்டங்கள் குறித்து பின்னர் வரும் ஆட்சியாளர்கள் "அவற்றை நீக்கிட அச்சமடையும் நாள் வரையில் அண்ணாதுரை தான் தமிழ்நாட்டை ஆள்கிறான் ! " என்பது போன்றொரு வசனம் இடம் பெற்றிருக்கும்.

இதே நேரத்தில் 1952 ல் தலைவர் கலைஞரின் வசனவீச்சில் வெளிவந்த மனோகரா படத்தின் இறுதிக் காட்சியில் வசந்தசேனையின் மகன் வசந்தன் ( காகா ராதாகிருஷ்ணன் ) இறக்கும் தருவாயில் மனோகரனாக நிற்கும் அண்ணன் சிவாஜியின் கரங்களை பிடித்து, "இந்த நாட்டை அண்ணா தான் ஆளவேண்டும்! " எனச் சொல்லி விட்டு இறப்பதாக ஓர் தீர்க்கதரிசன வசனத்தை தீட்டியிருப்பது எவ்வளவு வியப்பிற்கும், பெருமைக்கும் உரியதாகும்.

ஒருகாலத்தில் பெரிதாய் முக்கியத்துவம் இல்லாமல், " எங்காத்துக்காரரும் கச்சேரிக்குப் போகிறார்! " என்றிருந்த விளையாட்டுத் துறைக்கு இப்போது பொறுப்பேற்ற நமது துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் விளையாட்டு மேட்பாட்டுத்துறையில் பல உத்திகளைப் புகுத்தி, தமிழகமெங்கும் ஊக்குவிக்க, ஒத்துழைக்க, உதவிக்கரம் நீட்ட ஆளின்றி, தோளின்றித் தவித்த கிராமப்புற ஏழை நடுத்தர மாணவர்களை அடையாளம் கண்டு, ஏற்ற உதவிகளை உடனே செய்து, அவர்கள் தேசிய மற்றும் பன்னாட்டு அரங்கில் விளையாட்டில் பங்கு பெற உதவித்தொகை மற்றும் பல உதவிகள் செய்து, வெற்றி பெற்று விருதுடன் தாய்மண்ணை மிதிக்க, தவமாய் தவமிருந்த அவர்கள் கனவு மெய்ப்பட வசதி, வாய்ப்புகளை ஏற்படுத்தித் தந்து விளையாட்டுத் துறையை கல்வித்துறையோடு தொடரோட்டத்தில் தொடர, முன்னேற்றி விளையாட்டு துறை இன்று முக்கியத்துவம் பெறச்செய்துள்ளார்.

அதோடு எந்த மாநிலத்தில் இல்லாத ஒரு மனிதாபிமானத்திற்கும் மேலான செய்கையாய், பொய்கையில் மலர்ந்து பூக்கடைக்கு போகாத பூக்கள் போல் தங்கள் எண்ணங்களையெல்லம் மனத்திரையில் பூட்டிவைத்து ஏங்கித்தவித்த மாற்றுத்திறனாளிகள் இந்திய தமிழ்திசைப் பெருங்கடலை, பேரலைகளை எட்டியிருந்தே பார்த்து வியந்த நிலை மாற்றி அவர் தம் பாதங்களை அலையருகே சென்று, ஆசைதீர நனைந்திட நல்லேற்பாடு செய்தார். இது சாதாரணமாகத் தோன்றலாம்.

ஆனால் அவளுக்கென்று ஒரு மனம் எனும் ஜெயகாந்தனின் புகழ்பெற்ற நாவல் பின்னாளில் திரையிலும் ஒளிர்ந்தது.

அதுபோல அவர்களுக்கும் ஆசையிருக்குமே என்று சின்னவரின் சிந்தனையில் உதித்தது சாதாரண விஷயம் அல்ல.

பெண்களுக்கு விடியல் பயணம்! பிள்ளைகளுக்கு, காலை உணவு, கல்லூரி மாணவர்களுக்கு உதவித்தொகை! மாதம் ரூ.1000 , குடும்ப தலைவிக்கும் மாதம் ரூ.1000 வயதானோர்க்கு முதியோர் உதவித்தொகை மாதம் ரூ.1500 , அவர்கள் இல்லம் தேடி மளிகைப் பொருட்கள், மருத்துவம், அப்பா அம்மா இல்லாத அனாதை பிள்ளைகளின் எதிர்காலம் கருதி மாதம் ரூ.2500.

மகளிர் சுய உதவி மையங்கள், அவர்களுக்கு சுழல் நிதி, மழை வெள்ள இயற்கை பேரிடரால் துயருறும் எளிய நடுத்தர மக்களுக்கு உதவித்தொகை. வாழ்வாதாரத்தை இழந்த விவசாய மீனவர்களுக்கு இழப்பீடு மற்றும் மறுதொழில் தொடங்க உதவி மற்றும் மான்ய தொகைகள்!

ஓய்வு பெற்ற அரசுப்பணியாளர் உள்ளமெல்லாம் பூரிப்பு துள்ளி எழ புதிய ஓய்வூதிய சீர்திருத்த திட்டங்கள்

இப்படி நமது திராவிட மாடல் முதலமைச்சர், திராவிடப் பெருவேந்தர் தளபதியவர்களின் ஆட்சியில் ஏழை, எளியோர், விவசாயிகள், தொழிலாளர், பெண்கள்,கைம்பெண்கள், மாணவர்கள், நலிவடைந்தோர், பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட விளிம்புநிலை மக்கள், மீனவர்கள், ஆலைத்தொழிலாளர்கள், அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், ஆன்மீகப் பணியாளர்கள், பெண் காவலர்கள், மாற்றுத்திறனாளிகள், திருநங்கையர், தினக்கூலி வர்க்கத்தினர், திக்கற்றோர், வக்கற்றோர், வாழ வழியற்றோர், நிலமற்றோர், இருக்க இல்லமற்றோர், அயல்நாடுகளில் அல்லல்படும் தமிழர்கள், அண்டை மாநில மக்கள், நெசவாளர்கள், சிறு, குறு விவசாய, வியாபாரிகள், நலிந்த கலைஞர்கள், தொழில் முனைவோர், விளையாட்டு வீரர்கள் என இன்னும், இன்னும் எத்தனையோ தரப்பு மக்களின் துயர்துடைக்க, இதயபாரம் குறைக்க, தேவைகள் தீர, வருங்காலம் சிறக்க, வாட்டம் போக்கிட, ஓயாது உழைக்கும் நமது முதல்வருக்கு நன்றியும், வாழ்த்துக்களையும் கூறி, திராவிடச் சூரியனாம் அவரோடு இணைந்து, இந்த இனிய தமிழர் திருநாள் மற்றும் தைப்பொங்கலைக் கொண்டாடி மகிழ்வோம்.

இப்போதே ஊரெங்கும், திரும்பிய திசைகளெங்கும், பொங்கல் கலைகட்டத் தொடங்கி விட்டது.

அங்காடித் தெருக்களிலும், நடைபாதை வீதிகளிலும் , மளிகை மற்றும் துணிக்கடைகளிலும் மக்கள் கூட்டம்.

" புண்ணியவான் ஸ்டாலின் கொடுத்த மூவாயிரம்! அதோடு அரிசி, சர்க்கரை, வேட்டி, சேலை கரும்பு இந்த பொங்கலுக்கு எங்கும் கடனுக்கு கையேந்தப்போவதில்லை! " எனும் நன்றிப் பெருக்கில். தமிழரெல்லாம் இல்லந்தோறும் கொண்டாடும் இனிய பொங்கல்!

மடமையைப் போக்கிடும் மகிழ்ச்சிப் பொங்கல்!

ஏழை, எளியோர் துயர் துடைக்கும் எழுச்சிப் பொங்கல்!

சனாதனத்தை வேரறுக்கும் சக்கரைப்பொங்கல்!

திக்கற்றோர் துயர்துடைத்து, திசைகளெங்கும் மகிழ்ச்சி பொங்கும் திராவிடப் பொங்கல்!